# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

26th FEBRUARY 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 16







**13ஐ முற்றாக எதிர்க்கிறோம்** 05

**தேர்தலை நடத்தாவிட்டால் சிறைக்கு அனுப்புவோம்** 07

**மெய்சிலிர்க்கச் செய்த அமைச்சர்** 06

## மே-9 கலவரம்:

# சவேந்திரவின் தலையில்...



கடந்த வருடம் மே-9 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற கலவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அந்தக் கலவரம் தொடர்பான விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

02

## 18 பஸ்களுக்கு சேதம்



கடந்த வருடம் மே-9 அம திகதி நாட்டில் இடம்பெற்ற கலவரம் காரணமாக இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 18 பஸ்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளன.

இதனால் 7 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.தேசிய கணக்காய்வுத் திணைக்களத்தின் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

02



### 2 புதிய சட்டமூலங்கள்

## தேர்தல் மேலும் ஒத்திப்போடப்படும்

உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தில் திருத்தம் ஒன்றை மேற்க்கொள்வதற்காக இரண்டு சட்டமூலங்களை கொண்டு வருவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று அறிய முடிகிறது.

அதில் ஒன்று உள்ளூராட்சி சபைகளில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை 25

02






### ஜேவிபி இன்று கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம்:

## தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிராக..

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமைக்கு எதிராக ஜேவிபி இன்று கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

நாடு பூராகவும் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் என்று

02

## மீண்டும் மின் வெட்டு?

அடுத்த வருடம் இறுதியில் மீண்டும் மின்வெட்டு ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.மின்சார பொறியியலாளர்கள் இந்த சந்தேகத்தை வெளியிடுகின்றனர்.

மின்வெட்டு இனி இடம்பெறாது என்று கூறி மின்கட்டணத்தை அதிகரித்தபோதிலும் அடுத்த மாதம் மின்வெட்டு இடம்பெறக்கூடும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மின்சாரத்தை அவசரமாகக் கொள்வனவு செய்வதற்காக அதிகமான பணம் செலவாகின்றமை,நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் 52 வீதத்தால் குறைந்துள்ளமை,சப்புகஸ்கந்த நிலையத்தால் மின்னுற்பத்தி செய்ய முடியாமை உள்ளிட்ட காரணிகளால் அடுத்த மாதம் மின்வெட்டு சாத்தியப்படலாம் என்று பொறியியலாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.






புது சுடர்
www.puthusudar.lk
2023 FEBRUARY 26 - SUNDAY

# கோமாளியாக ஜனாதிபதி...!!!

தேர்தல் இல்லை. ஒத்திப்போடப்பட்டுள்ளது.அது எப்போது இடம்பெறும் என்று ஜனாதிபதி மாத்திரமே அறிவார்.உள்ளூராட்சி சபைத் தேர்தல் அப்படியே இருக்க ஜனாதிபதித் தேர்தல் வருமோ என்ற கேள்வியும் எழுகிறது.

தேர்தலை ஒத்திப்போட்டது நானில்லை என்று ஜனாதிபதி கூறினாலும்கூட,இல்லை நான்தான் ஒத்திப்போட்டேன் என்று மறைமுகமாகக் கூறி வருகிறார் ஜனாதிபதி.

அதிலும் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி நாடாளுமன்றில் கூறியவை பலரின் கோபத்தைக் கிளறியுள்ளது.ஒரு கோமாளியின் கூற்றைப்போல் அமைந்துள்ளது என்று விமர்சிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சியினர் தேர்தலைக் கேட்டு போராடி வரும் நிலையில் அவர்கள்தான் தேர்தலை ஒத்திப்போடச் சொன்னார்கள் என்று கூறினார் ஜனாதிபதி.ஆனால்,அவர்கள் யாரென்று சொல்லவில்லை. அவர்களின் பெயர்களைக் கூறவில்லை.

தேர்தலை ஒத்திப்போடுவதற்காக கடந்த காலங்களில் அரசால் முன்வைக்கப்பட்ட பல காரணங்களுள் இதுவும் ஒன்று.

சிறந்த இராஜதந்திரி-அறிவாளி என்று பெயர் வாங்கிய ஜனாதிபதி இவ்வாறு சிறுபிள்ளைத்தனமான-கோமாளித் தனமான கூற்றுகளை முன்வைத்து தேர்தல் ஒத்திப் போட்டமைக்கான காரணத்தைக் கூறுவது அழகல்ல.

இந்த நாட்டு மக்கள் தேர்தலை ஒத்திப் போட்ட மைக்கான அறிவுபூர்வமான காரணத்தை ஜனாதிபதியிடம் இருந்து எதிர்பார்க் கின்றனர்.

ஒருபுறம், தேர்தலுக்கும் எனக்கும் தொடர்பில்லை. அது தேர்தல் ஆணைக்குழுவின் வேலை என்று கூறிவிட்டு மறுபுறம் தான்தான் ஒத்திப்போட்டேன் என்று மறைமுகமாக சொல்லி வருகிறார் ஜனாதிபதி.

தேர்தலை எதிர்க்கட்சி எம்பிக்களே ஒத்திப்போடச் சொன்னார்கள்அடுத்த வருடம்தான் தேர்தல்தேர்தலுக்கு பணம் இல்லை போன்ற ஜனாதிபதியின் வாயால் வெளிவந்த கூற்றுக்கள் மூலம் ஜனாதிபதிதான் தேர்தலை ஒத்திப்போட்டார் என்பது தெளிவாகிறது.

அதனால்தான் மக்கள் தேர்தலை ஒத்திப்போட்டமைக்கான சரியான-அறிவுபூர்வமான காரணத்தை ஜனாதிபதியிடமே கேட்கிறார்கள்.

ஆனால்,ஜனாதிபதியின் கூற்றோ-விளக்கமோ கோமாளித்தனமாக இருக்கிறது.இது ஜனாதிபதிமீது மக்களின் கோபத்தை மேலும் அதிகரிக்கவே செய்கிறது.

தேர்தலை ஒத்திப்போட்டதால் அரசு எதுவித நன்மையையும் அடைந்து விடவில்லை. அரசுக்கு வரவிருந்த தேர்தல் தோல்வி மேலும் விசாலமாகியுள்ளதே தவிர தோல்வி தவிர்க்கப் படவில்லை.

தேர்தலை ஒத்திப் போட்டவுடன் எதிர்க்கட்சிகள் அத்தோடு அடங்கி விடவில்லை- பிரசாரப் பணியை நிறுத்தி விடவில்லை.

அந்தப் பிரசார பணிகள் மக்களிடம் வாக்கு கேட்கும் பிரச்சாரமாக இல்லாது அரசிடம் தேர்தலைகேட்கும் போராட்டமாக மாற்றமடைந்துள்ளது.

ஜேவிபி இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துகிறது. நாடுபூராகவும் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

அதேபோல் ஐக்கிய மக்கள் சக்தி-டலஸ் அழகப்பெரும-விமல் வீரனஸ அணி-சிறிலங்கா சுதந்திர கட்சி என பல தரப்பும் களத்தில் இறங்கி நிற்கின்றன.

இவர்கள் உள்நாட்டில் மாத்திரமல்ல வெளிநாடுகளிலும் போராட்டங்களை விஸ்தரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர்.ஐ.நா சபையில்-சர்வேதச நாடாளுமன்ற சங்கத்தில் என பல சர்வதேச அமைப்புக்களில் அரசுக்கு எதிராக முறைப்பாடுகளைச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் இந்த அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகள் வெளிக்காட்டப்ப டவுள்ளன.அது அரசுக்கு சர்வதேச மட்டத்தில் பல்வேறு வழிகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.சர்வதேச நிதி உதவிகள் கிடைப்பதற்குத் தடையாகவும் அமையலாம்.

சர்வதேசத்தின் உதவி தேவைப்படுகின்ற காலம் இது.இந்த நேரத்தில் சர்வதேசத்திடம் கெட்டபெயரை வாங்குவது நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல.

தேர்தலை ஒத்திப்போடுவதன்மூலம் அரசுக்கு வரவிருக்கின்ற தேர்தல் தோல்வியைத் தடுக்கலாம் என்றால் பரவாயில்லை.இது தோல்வியை மேலும் அதிகரிப்பதற்கல்லவா வழிவகுத்துள்ளது.

அரசு சிந்தித்து செயற்ப ட வேண்டும். தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இந்த நாட்டு புத்திஜீவிகளின் கருத்து.

# மருதமுனை றபீக்காவுக்கு சாம சிறி பட்டமளிப்பு........!

அகில இன நல்லுறவு ஒன்றியம் நடாத்தி வரும் - கல்வி, கலை, கலாச்சார , சமூக மற்றும் சமய விடயங்களில் அதீத ஈடுபாடு காட்டும் கல்வியியலாளர்கள் மற்றும் வர்த்தக பிரமுகர்களை கௌரவிக்கும் நிகழ்வு (2022) அண்மையில் நடைபெற்றது.

இதன்போது - மருதமுனையைச் சேர்ந்த சித்தி றபீக்கா - சாம சிறி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு இலங்கையின் அழகுக் கலை விற்பன்னரான றபீக்கா - சிறந்த ஆளுமையுள்ளவரும் கூட..

சிகை அலங்காரம் - மணப்பெண் அழகு கலை என்பனவற்றில் சிறந்த தேர்ச்சியும் பெற்றவர்.

# அரசியல் கைதிகளின் விடயத்தில் கீழ்த்தர அரசியல் செய்யக்கூடாது!

## - நீதி அமைச்சர் காட்டம் -



"தமிழ் அரசியல் கைதிகளை வைத்து தமிழ் அரசியல்வாதிகள் எவரும் அரசியல் நடத்தக்கூடாது என்று நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றோம். தமிழ் அரசியல்வாதிகளின் கீழ்த்தரமான அரசியல் செயற்பாடுகள் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்தில் தாக்கத்தைச் செலுத்தும்."

- இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"சிறைச்சாலைகளில் இன்னும் 29 தமிழ் அரசியல் கைதிகளே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் தண்டனை விதிக்கப்பட்டவர்களை ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் ஊடாகவும், ஏனையவர்களைச் சட்டமா அதிபரின் பரிந்துரைக்கமைய நீதிமன்றத்தின் ஊடாகவும் விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களின் கவலைகளை நாங்கள் புரிந்துகொள்கின்றோம். ஆனால், அந்தக் குடும்பங்களின் கண்ணீரில் தமிழ் அரசியல்வாதிகள் அரசியல் நடத்துகின்றனர். இது மிகவும் வேதனை தரும் விடயம்" - என்றார்.

## 18 பஸ்களுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

மே-9 ஆம் திகதி கோட்டா கோ ஹோம்,மைனா கோ ஹோம் மீது மஹிந்த ராஜபக்ஸவின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியத்தைத் தொடர்ந்து நாட்டில் கலவரம் வெடித்தது.

அந்தக் கலவரத்தின்போது எம்பிக்கள் வீடுகள்,வாகனங்கள் உள்ளிட்ட சொத்துக்கள் எரிக்கப்பட்டன.நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

அந்தக் கலவரத்தின்போதே இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 18 பஸ்களுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டது.

## ஜேவிபி..

(முன்பக்கத் தொடர்ச்சி..)

ஜேவிபி தெரிவித்துள்ளது.தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ளபோதிலும் தமது செயற்பாடுகள் தொய்வின்றித் தொடரும் என அக்கட்சி மேலும் கூறியுள்ளது.

## 2 புதிய..

(முன்பக்கத் தொடர்ச்சி..)

வீதத்தால் அதிகரித்தல். அடுத்தது 8000 ஆக இருக்கின்ற உறுப்பினர்களை 5000 ஆகக் குறைத்தல்.

இந்தச் சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டால் தேர்தல் மேலும் ஒத்திப்போடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மே 9...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

**இக்கலவரம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரனாகொடவின் தலைமையில் மூவர் கொண்ட குழுவை அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஸ நியமித்திருந்தார்.**

**அந்தக் குழு விசாரணைகளை நிறைவு செய்து இப்போது அறிக்கையை வெளியிட்டுள்ளது.**

**அந்த அறிக்கையிலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

**விசேட அதிரடி படை,அவசர சந்தர்ப்பத்தின்போது அழைக்கக்கூடிய இராணுவத்தின் கலக்கம் அடக்கும் பிரிவு,மொபைல் பாதுகாப்பு வாகனங்கள் ஆகிய வசதிகள் முகாமுக்குள் இருந்தும்கூட இவற்றைப் பாவிப்பதற்காக ஜெனெரல் சவேந்திர சில்வா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கவில்லை என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**இதனால் சவேந்திர தொடர்பில் சிஐடி விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தக் குழு சிபாரிசு செய்துள்ளது.**

**இந்த அறிக்கை கடந்த செப்டம்பர் மாதம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.**

**இதை நாடாளுமன்றில் வெளிப்படுத்துமாறு மொட்டு கட்சி எம்பிக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

**மொட்டு கட்சி எம்பிக்கள் 115 பேர் கையெழுத்திட்டு ஜனாதிபதியிடம் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.**



# ஜூலை மாதம் மின்கட்டணம் குறைக்கப்படும்

ஜூலை மாதமளவில் மின்கட்டணம் குறைக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர கூறினார்.அவர் மேலும் கூறுகையில்

நான்கூட இந்த மின்கட்டண அதிகரிப்பை எதிர்க்கிறேன்.வேறு வழியில்லை.பல மாற்று வழிகளைத் தேடினோம்.முடியவில்லை. அதனால்தான் இறுதியில் அதிகரித்தோம்.

இது 2014 இல் இருந்து வருகின்ற பிரச்சினை. சம்பூர் மின் நிலையத்தை அமைப்பதற்கு இடமளித்திருந்தால் இந்தப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு கிடைத்திருக்கும்.சம்பூருக்கு பதிலாக மாற்றுத் திட்டம் வைக்கப்படவில்லை.

இருந்தும், இந்தப் பிரச்சினை தாற்காலிகமானதுதான். ஜூலை மாதளவில் கட்டணம் குறைக்கப்படும்.

அதேபோல், எரிபொருட்களின் விலையையும் குறைக்கவே எதிர்பார்க்கிறோம்.எரிபொருட்களின் விநியோகத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில்தான் QR CODE அறிமுகம் செய்யப்பட்டது.

Dialog -Millennium -ICT ஆகிய நிறுவனங்களின் கணினி பொறியியலாளர்கள்தான் QR CODE ஐ உருவாக்கினர்.

இருக்கின்ற பணத்துக்கு ஏற்ப இவ்வளவுதான் எரிபொருள் இறக்குமதி செய்ய முடியும்.இவ்வளவுதான் வழங்க முடியும்.அதற்கு ஏற்ப முறைமை ஒன்றைத் தயாரிக்குமாறு நான் கூறினேன்.அதற்கு ஏற்ப QR CODE உருவாக்கப்பட்டது.

QR CODE முறைமையை மூன்று அல்லது நான்கு மாதங்களில் நீக்கி சாதாரண நிலையில் முன்பு இருந்ததுபோல் எரிபொருளை விநியோகிக்கும் திட்டம் உள்ளது.

அப்படி நீக்கியபின் எரிபொருள் கூட்டுத்தாபனத்தை புனரமைக்கும் திட்டத்தின்கீழ் புதிய எரிபொருள் விநியோகிஸ்தர்கள் இலங்கைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

இலங்கை மின்சார சபையும் எரிபொருள் கூட்டுத்தாபனமும் கட்டாயம் மீள்புனரமைக்கப்படும்.

அப்படி புனரமைக்கும்போது எரிபொருட்களின் விலையை அதிகரிக்கும் யோசனை எதுவும் இல்லை.அப்படி அதிகரிப்பதாக இருந்தால் இப்போதைய நிலைமையின்படி 10 ரூபா அல்லது 15 ரூபாவால்தான் அதிகரிக்கப்படும்.

ஆனால், முடியுமானவரை விலையைக் குறைக்கவே பார்க்கிறோம்.

மங்கள சமரவீர நிதி அமைச்சராக இருக்கும்போது பாவிக்கப்பட்ட விலைச் சூத்திரமே இப்போதும் பாவிக்கப்படுகிறது.

உக்ரைன் போர் போன்று உலகில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டால் அப்போது என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது.

இந்த நிறுவனங்களின் மீள்புனரமைப்பு என்பது கட்டங்கட்டமாக செய்யப்படும். முதலில் இருக்கின்ற ஊழியர்கள் பற்றி கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்படும். அந்த எண்ணிக்கையின் அடிப்படையில் என்ன செய்வதென்று நடவடிக்கை எடுக்கப்படும்.

மூன்று விநியோக நிறுவனங்களை அழைத்து போட்டித்தன்மையை உருவாக்குவோம்.போட்டித்தன்மையை உருவாக்கினால் விலைகள் குறைவதற்கு வாய்ப்புண்டு - என்றார்.



# பொருளாதாரத்தை அழித்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்



பொருளாதாரத்தை அழித்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்த அழிவை ஏற்படுத்திய அணியை ஆட்சியில் வைத்துக்கொண்டு அவர்களை பாதுகாக்கவே நடவடிக்கை எடுக்கப்படுகிறது.அதற்காகவே தேர்தலை ஒத்திப்போடுகிறார்கள்.தேர்தலை நடத்தினால் அரசு தோல்வியடைந்துவிடும் என்று எம்.வேலுகுமார் எம்பி கூறினார்.அவர் மேலும் கூறுகையில்

தேர்தலை நடத்த வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு.அவரோ தேர்தலை தர மறுக்கிறார். தேர்தலை நடத்துவதற்குப் பணம் இல்லை. பணம் இருந்தாலும் தேர்தல் இல்லை என்கிறார்.

அப்படிச் சொல்ல முடியாது.அது பிழை.

தேர்தலை ஒத்திப்போடுவதற்காக தேர்தலை முறைமை பிழை என்று கூறுகிறது அரசு. உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம் என்றும் அதைக் குறைக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

இவ்வளவு காலமும் இருந்துவிட்டு இப்போதுதான் - அதுவும் தேர்தல் நெருங்கும்போதுதான் அரசுக்கு அது பிழையாகத் தெரிகிறது.இந்த முறையைமை திருத்திவிட்டுத்தான் தேர்தலை நடத்த வேண்டு என்கிறார்கள்.

தேர்தலை ஒரு வருடம் ஒத்திப்போட்டார்கள்.அந்தக் காலப்பகுதிக்குள் இதைத் திருத்தி இருக்கலாமே.அதைச் செய்யாது இப்போது தேர்தல் முறைமையைக் குறைகூறுவதை ஏற்க முடியாது.

பொருளாதாரத்தை முற்றாக அழித்துவிட்டார்கள். இப்போது கொஞ்சமாவது எஞ்சி இருப்பது இந்தத் தேர்தல்தான். அதையும் அழிக்கப்போகிறார் ஜனாதிபதி.

இரண்டையும் அழித்துவிட்டால் நாட்டின் எதிர்காலம் என்னாவது. ஒரு தனிமனிதன் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு ஆட்டம் போடுகிறார்.

பொருளாதாரத்தை அழித்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்த அழிவை ஏற்படுத்திய அணியை ஆட்சியில் வைத்துக்கொண்டு அவர்களை பாதுகாக்கவே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதற்காகவே தேர்தலை ஒத்திப்போடுகிறார்கள்.தேர்தலை நடத்தினால் அரசு தோல்வியடைந்துவிடும் - என்றார்.

# சஜித் ஜனாதிபதி அனுர எதிர்கட்சித் தலைவர்



ஜேவிபியும் ஐக்கிய மக்கள் சக்தியும் மோதிக்கொள்வது நல்லதல்ல.அது ரணிலுக்கே சாதகமாக அமையும்.

என்றோ ஒருநாள் சஜித் ஜனாதிபதியாவார்அனுரகுமார எதிர்கட்சித் தலைவராவார் என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினரும் முன்னாள் எம்பியுமான ஹிருணிகா பிரேமசந்திரன் கூறினார்.அவர் மேலும் கூறுகையில்

இப்போதைக்கு மொட்டு கட்சி சரியாக களத்தில் இறங்காததால் ஜேவிபி எங்களுடன் போட்டி போடுகிறது.

ஒருவேளை,மஹிந்த பிரதமரானால் அவர்களின் பிரசாரம் தீவிரமடயலாம். அப்போது அவர்கள்தான் எங்களுக்கு போட்டி.தினேஷ் குணவர்தனவை இப்போது விற்பனை செய்ய முடியாது.மஹிந்தவுக்கு பழைய சக்தி-உசார் இல்லை.

இப்போதைக்கு கொஞ்சமாவது சந்தைப்படுத்தக்கூடிய ஒருவர் மஹிந்தான்.

நாட்டை சீரழித்தது கோத்தாதான்.மஹிந்த அல்ல.மஹிந்த போரை வென்றவர் என்று அவர்கள் கூறி பிரசாரம் செய்வார்கள்.

ஏனைய கட்சிகளில் இருந்து உடைந்து சென்ற வாக்குகள்-மிதப்பு வாக்குகள் போன்றவைதான் ஜேவிபியிடன் இப்போது இணைகின்றன.

ஜேவிபி ஆரம்பிப்பது 4 லட்சம் வாக்குகளில் இருந்து.இப்போது 10 அல்லது 12 லட்சம் வாக்குகளை அவர்கள் சேர்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஜேவிபி ஒருபோதும் அவர்கள் செய்த குற்றங்களை ஒத்துக்கொண்டு மக்களிடம் மன்னிப்பு கேட்பது கிடையாது.அதை நியாயப்படுத்துகிறார்கள்.போராட்டத்தில் அப்படி நடப்பது சாதாரண விடயம் என்று லால்காந்த அண்மையில் கூறினார்.

மஹிந்த ராஜபக்சவை எதிர்கட்சித் தலைவராக்குவதற்கும் பிரதராக்குவதற்கும் ஜனாதிபதியாக்குவதற்கும் எனது தந்தை கடுமையாக உழைத்தார்.

கோத்தா ஜனாதிபதியாவதற்கு காரணம் மஹிந்த ஜனாதிபதியாக இருந்தமைதான். மஹிந்த ஜனாதிபதியாவதற்கு எனது தந்தையின் பங்களிப்பு உண்டு.

அப்படியென்றால் கோத்தா ஜனாதிபதியாவதற்கு நாங்களும் காரணம் என்று நான் உணர்ந்தேன்.

அதனால்தான் அதை நிவர்த்தி செய்வதற்காக பெண்களை அழைத்துக்கொண்டு போய் கோத்தாவின் வீட்டுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தேன்.

அதேபோல் ஜேவிபியும் கடந்த காலங்களில் அவர்களால் செய்யப்பட பிழைகளுக்காக மனம் வருந்தி-மன்னிப்பு கேட்டு செயற்படுவதாக இல்லை.

சஜித் பிரேமதாஸாவிடம் அப்படி பண்பு இல்லை.அவரது பிழைகளை சுட்டிக் காட்டினால் சிரித்துக்கொண்டு ஏற்றுக்கொள்வார்.

சஜித் பிரேமதாசா எந்தவொரு குற்றச்சாட்டும் இல்லாத ஒருவர்.அவர் புதிய சிந்தனையுடையவர்.மிகவும் எளிமையானவர்.யாரையும் பழிவாங்கும் எண்ணம் அவரிடம் இல்லை.

ஜேவிபியும் ஐக்கிய மக்கள் சக்தியும் மோதிக்கொள்வது நல்லதல்ல.அது ரணிலுக்கே சாதகமாக அமையும்.

என்றோ ஒருநாள் சஜித் ஜனாதிபதியாவார்அனுரகுமார எதிர்கட்சித் தலைவராவார்.என்றார்.

# ரணில் ஜனநாயக விரோதப் போக்கை சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்துவோம்



மக்களை வீதிக்கு இறக்கிப் போராடுவோம். நீதிமன்றத்தின் ஊடாக எடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் எடுப்போம். ரணிலின் சர்வாதிகார முகத்தை சர்வதேசத்துக்கு காட்டுவோம்.அவரை ஒரு ஜனநாயகவாதியாக நினைத்திருக்கும் சர்வதேச நாடுகளுக்கு ரணில் யார் என்பதைக் கூறுவோம் என்று ஜேவிபி உறுப்பினர் வசந்த சமரசிங்க கூறினார். அவர் மேலும் கூறுகையில்:

தேர்தலை ஒத்திப்போட்டு அரசு சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களின் ஜனநாயக உரிமையைப் பறித்து வருகிறது.

ஆரம்பத்தில் இருந்தே தேர்தலை ஒத்திப்போடுவதற்கு பல முயற்சிகளை அரசு மேற்கொண்டு வந்தது.இதற்கு எதிராக அணைத்து நடவடிக்கைகளையும் நாம் எடுப்போம்.

மக்களை வீதிக்கு இறக்கிப் போராடுவோம். நீதிமன்றத்தின் ஊடாக எடுக்க வேண்டிய சட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் எடுப்போம். ரணிலின் சர்வாதிகார முகத்தை சர்வதேசத்துக்கு காட்டுவோம்.அவரை ஒரு ஜனநாயகவாதியாக நினைத்திருக்கும் சர்வதேச நாடுகளுக்கு ரணில் யார் என்பதைக் கூறுவோம்.

தேர்தலை நடத்தும்வரை- மக்களின் ஜனநாயக உரிமையை மீளப் பெற்றுக்கொள்ளும்வரை தொடர்ந்து போராடுவோம்.

நிதி அதிகாரம் நாடாளுமன்றத்தின் கையில் இருப்பதால் தேர்தலுக்கு பணம் தரமாட்டேன் என்று நிதி அமைச்சின் செயலாளரால் எவ்வாறு கூற முடியும்?

வாக்குச் சீட்டுக்களை அச்சடிக்கும் அரச அச்சகத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க முடியாது என்று பொலிஸ்மா அதிபர் கூறுகிறார். அரசியல்வாதிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் தேவைக்கு அதிகமாக பாதுகாப்பு வழங்கி இருக்கும் பொலிஸ்மா அதிபர் அச்சகத்துக்கு பாதுகாப்பு வழங்க முடியாது என்கிறார்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக தேர்தலை ஒத்திப்போடுவதாக அரசு சொல்கிறது. பொய்.அதற்கும் தேர்தலுக்கும் சம்பந்தம் கிடையாது.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிவிட்டுத்தான் தேர்தலை நடத்த வேண்டும் என்றால் ஒருபோதும் தேர்தல் இடம்பெறாது. ஏனென்றால்,இந்த அரசு ஒருபோதும் பொருளாதாரத்தைக் கட்டியழுப்பாது.அதற்கான ஆற்றல்-நோக்கம் இவர்களிடம் இல்லை.

இவர்களின் நோக்கம் எல்லாம் கொள்ளையடிப்பதுதான்.2015 இல் இருந்து 2019 வரை ஆட்சியில் இருந்த ரணிலால் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப எதுவும் செய்ய முடியவில்லை.இப்போது செய்யப்போகிறாரா?

முடியாதுவிட்டால் போய்விட வேண்டும்.மக்கள் தேர்தலின் ஊடாக அவர்களுக்குத் தேவையான அரசை நியமித்துக்கொள்வார்கள்.

அரசின் ஜனநாயக விரோத செயற்பாட்டுக்கு எதிராக முழு நாட்டு மக்களையும் வீதிக்கு இறக்கிப் போராடுவோம் - என்றார்.



# அலரி மாளிகைக்குள் அன்றிரவு.......

**உயிரைக் காக்க போராடிய மஹிந்த...**

**மூலைமுடுக்குகளில் படுத்துறங்கிய எம்பிக்கள்...**

**பசியில் வாடிய மக்கள்...**

**சமைத்துப் பரிமாறிய ஷிரந்தி...**

**பேர வாவியில் சிக்கியவர்களுக்கு அலரிமாளிகையில் இருந்து உணவு...**

**மஹிந்த ராஜபக்ஸவை மீண்டும் பிரதமராக்குவதற்கான முயற்சி ஒன்று இடம்பெறுகிறது.**
அவர் அந்தப் பதவியில் இருந்து விலகி ஒன்பது மாதங்களாகிவிட்டன.
பிரதமர் பதவியில் அவர் விலகுவதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டமைக்கு என்ன காரணம்...? யார் காரணம்...?
பதவி விலகிய அன்று அலறி மாளிகைக்குள் நடந்தது என்ன...?
இதுபோன்ற சுவாரசியமான விடங்களை பகிரப்போகிறது இந்த ஆக்கம்.
நாட்டின் பொருளாதாரம் கடும் வீழ்ச்சியை சந்திக்கிறது.
ரொக்கட் வேகத்தில் பொருட்களின் விலை உயர்வு.
மின் வெட்டு, எரிபொருளுக்கு வரிசை, விவசாயத்துக்கு பசளை இல்லை, இயற்கை பசளை என்ற பெயரில் குப்பைகள் இறக்குமதி.
அதனால் விளைச்சல் பாதிப்பு.
அதனால் உணவுத் தட்டுப்பாடு.
இதனால் வீதிக்கு இறங்குகிறார்கள் மக்கள்.முழு அரசைக் கவிழ்ப்பதற்காக..
அதில் முதல் பலி மஹிந்த...

### பல தடவைகள் அவமானம்

2015 ஜனாதிபதி தேர்தலின் பின் இருந்து இன்றுவரை பல தடவைகள் இவர் அவமானப்பட்டுள்ளார் மஹிந்த .

எல்லாம் பதவிக்காக...

2015 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த மஹிந்த அதே ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

முன்னாள் ஜனாதிபதிகள் யாரும் செய்யாத வேலை இது.

நாட்டின் அதி உயர் பதவியான ஜனாதிபதி பதவியை வகித்த யாரும் வெறும் எம்பியாக இருக்கமாட்டார்கள், ஆனால், மஹிந்த அதற்கு விதிவிலக்கு.

அந்தத் தேர்தலில் வெற்றிபெற்று எம்பியாகிறார்.

பின்னர் அப்போதைய ஜனாதிபதி மைத்திரியின் கயிற்றை விழுங்கி ரணிலிடம் இருந்து பறிக்கப்பட்ட பிரதமர் பதவியை ஏற்றுக்கொள்கிறார்.

வெறும் 52 நாட்களே பிரதமர்.

பின்னர் நீதிமன்ற தீர்ப்பின்படி பதவி இழக்கிறார்.

மஹிந்தவின் இந்தப் பதவி ஆசை அப்போது கடுமையாக விமர்சிக்கப்பட்டது. அவமானப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து 2020 நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டி.

பிரதமராகிறார்...

நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக 2022இல் அவரைப் பதவி விலகுமாறு பல பக்கங்களிலும் இருந்தும் அழுத்தங்கள்.

விலகவில்லை. அதை அவர் நிராகரிக்கிறார்.பதவி ஆசை விடவில்லை.

இறுதியில் அவர் எவ்வாறு பதவி விலகினார்...?

நாடே அறிந்த விடயம்.

மஹிந்தவை நீக்குவதற்கான காரணம் என்ன...?

அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன...?

அவர் விலகிய அன்றைய தினம் அலறி மாளிகையில் நடந்தது என்ன...?

### இருவரின் தேவை : மஹிந்த பலிக் கடா

வலுவடைகிறது ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஸ மீதான எதிர்ப்பு.மிரிஹான சம்பவத்தோடு...

கோத்தாவின் மிரிஹான வீட்டுக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தோடு...

பதவி விலகுகிறார்கள் அமைச்சர்கள்.

சுயாதீன அணியாகப் பிரிகின்றன அரசின் பங்காளி கட்சிகள்.

எல்லோரும் பதவி விலக... மஹிந்த மட்டும் அப்படியே...

சுயாதீன குழுக்களிடம் இருந்து அழுத்தம்...

ஜனாதிபதியிடம் இருந்தும் அழுத்தம்...

அசைவதாக இல்லை மஹிந்த...

“விலகமாட்டேன்.முடிந்தால் விலக்கு.”

சவால் விடுகிறார் ஜனாதிபதிக்கு...

விலக்க விரும்பவில்லை கோட்டா. அது குடும்பப் பிரச்சினை.விலகுவதற்கே அழுத்தம்.

மக்கள் விலகக் கோருவதோ ஜனாதிபதியை... ஆனால், ஜனாதிபதி விலகச் சொல்வதோ மஹிந்தவை...

காரணம்....? இரண்டு.

ஒன்று தன்மீதான மக்களின் எதிர்ப்பை திசை திருப்புதல்.அது ஜனாதிபதியின் தேவை.

அடுத்து ரணிலின் தேவை.அவர் பிரதமராகும் தேவை.

தற்போதைய பொருளாதார பிரச்சினையில் இருந்து தன்னைப் பாதுகாக்கக்கூடிய சரியான பாதுகாவலன் ரணில்தான் எனக் கருதுகிறார் ஜனாதிபதி கோத்தா.

அதனால் ரணில் பின்னால் இருந்து தள்ளிவிட...முன்னால் வந்து மஹிந்தவை விரட்டுகிறார் கோத்தா .

### மகன்மாரின் ஊடாகத் தூது

ஜனாதிபதி கோத்தாவிடம் மஹிந்தவுக்கு தொடர் தூது.பலரின் ஊடாக...

மஹிந்தவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ஸ–கடைசி மகன் ரோஹித் ராஜபக்ஸ இருவரையும் அழைக்கிறார் ஜனாதிபதி.

நிலைமையை விளக்குகிறார்.

அப்பாவை உடனடியாக விலகச் சொல்லுங்கள்.அவர் இப்படி பிடிவாதமாக இருந்தால் அவருக்கு இப்போது இருக்கின்ற செல்வாக்கும் இல்லாமல் போய்விடும்.

இப்படிப் போனால் உங்களின் ,அதாவது நாமலின் அரசியல் எதிர்காலம்தாம் பாதிக்கும் என்று எச்சரிக்கிறார் ஜனாதிபதி.

நிலைமையை உணருகிறார்கள் இருவரும்.போய்ச் சொல்கிறார்கள் தந்தையிடம்.

விலகுங்கள். இப்போதைக்கு அதுதான் நல்லது.

நிதானமாகச் சிந்திக்கிறார் மஹிந்த.

ஒரு முடிவுக்கு வருகிறார். நல்ல முடிவுதான் அது.

### ஜோன்ஸனின் கயிற்றை விழுங்கிய யோஷித்த.

மஹிந்த விலகும் முடிவுக்கு வர மஹிந்தவின் இரண்டாவது மகன் யோஷித்த அதை எதிர்க்கிறார்.விலக வேண்டாம் என்கிறார்.

அதற்குக் காரணம் ஜோன்ஸன் பெர்னாண்டோ,சனத் நிசாந்த ,திஸ்ஸ குட்டியாராய்ச்சி உள்ளிட்டவர்கள்.

மூளைச் சலவை செய்கிறார்கள் யோஷித்தவை...

“உங்க அப்பா எதற்காக விலக வேண்டும்.? அவர் விலக வேண்டும் என்று மக்கள் எங்காவது கூறுகிறீர்களா...? இல்லையே...

ஜனாதிபதியைத்தான் விலகச் சொல்கிறார்கள்.

Go Home Gota என்றே சொல்கிறார்கள்.நாம் மஹிந்தவைப் பாதுகாப்போம் என்கிறார்கள்.

இவர்களின் கயிற்றை விழுங்குகிறார் யோஷித்த.மஹிந்தவின் பதவி விலகலை எதிர்க்கிறார்.

### அடுத்த பிரதமர் டலஸ் முசு தினேஷ்...?

மஹிந்த விலக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் சுயாதீன குழுக்கள்.அவர் விலகினால் யார் பிரதமர்.?

பிரேரிக்கிறார்கள் ஒருவரை.

அவர்தான் டலஸ் அழகப்பெரும.

அவருக்கும் வந்துவிட்டது ஆசை. பிரதமராகும் ஆசை.

இறங்குகிறார் மஹிந்தவுக்கு எதிராக.

வெளிப்படையாகக் கூறுகிறார்.“மஹிந்த விலக வேண்டும்.”

இதற்கு எதிராக இன்னோர் அணி. மஹிந்த ஆதரவு அணி.

ஒருவேளை மஹிந்த விலகினால்...? டலஸ் பிரதமர் இல்லை.

தமது ஆதரவு–மஹிந்த விசுவாசி ஒருவரை நியமிக்க வேண்டும்.

அவர்களும் பிரேரிக்கிறார்கள் ஒருவரை.

அவர்தான் தினேஷ் குணவர்தன...

**(ஊடகவியலாளர் எம்.ஐ முபாறக்)**

மிகுதி அடுத்த இதழில்...

**மஹிந்தவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ஸ- கடைசி மகன் ரோஹித் ராஜபக்ஸ இருவரையும் அழைக்கிறார் ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஸ.நிலைமையை விளக்குகிறார்.**

**அப்பாவை உடனடியாக விலகச் சொல்லுங்கள். அவர் இப்படி பிடிவாதமாக இருந்தால் அவருக்கு இப்போது இருக்கின்ற செல்வாக்கும் இல்லாமல் போய்விடும்.**

**இப்படிப் போனால் உங்களின் ,அதாவது நாமலின் அரசியல் எதிர்காலம்தாம் பாதிக்கும் என்று எச்சரிக்கிறார் ஜனாதிபதி. நிலைமையை உணருகிறார்கள் இருவரும்.போய்ச் சொல்கிறார்கள் தந்தையிடம்.**

**விலகுங்கள். இப்போதைக்கு அதுதான் நல்லது. நிதானமாகச் சிந்திக்கிறார் மஹிந்த. ஒரு முடிவுக்கு வருகிறார். நல்ல முடிவுதான் அது.**



- ஜேவிபி ஆட்சிக்கு வந்தால் மக்களின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே?

- நீங்கள் வடக்கில் பொய் கூறி இருக்கிறீர்களா 13 தரமாட்டோம் என்று?

- 2019 தேர்தலில் அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகி இருந்தால்..?

- சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன? அவர்களின் யோசனையை ஏற்பீர்களா? அல்லது நிராகரிப்பீர்களா?

- விஜயகுமாரதுங்கவ கொலை செய்தது ஜேவிபி என்று சந்திரிக்கா கூறியுள்ளாரே?

**தெற்கு மக்கள் ஏற்றுக்கொள்ளாத அரசியல் தீர்வு எங்களுக்கு வேண்டாம் என்று ஆர்.சம்பந்தன் கூறியுள்ளார்.அப்படியென்றால் தெற்கு மக்கள் 13 ஐ ஏற்கவில்லை.எமது நிலைப்பாடும் ஆர். சம்பந்தனின் நிலைப்பாடும் ஒன்றுதான்.**

**அதுமட்டுமல்ல.தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய-எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எமது அரசால் மாத்திரமே முன்வைக்க முடியும்.**

**நாம் ஆட்சிக்கு வந்தால் அதைச் செய்வோம்.ரணிலால் ஒருபோதும் தீர்வை முன்வைக்க முடியாது.**

**யட பரீட்சைக்காக படிக்கிற மாணவர்களுக்கு ஒரு மணி நேரம் மின்சாரம் வழங்க முடியாத ரணிலால் எப்படி அரசியல் தீர்வை வழங்க முடியும்?**

**தமிழர்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காக ரணில் நடத்தும் நாடகம் இது.இது தமிழர்களுக்கு தெரியும்.அவர்கள் ஒருபோதும் இதற்கு ஏமாந்து ரணிலுக்கு வாக்களிக்கமாட்டார்கள். தெற்கில் ஒரு குழப்பத்தை-இனவாதத்தை ஏற்படுத்துவதற்கு ரணில் முற்பட்டார்.அது நடக்கவில்லை.**

# 13ஐ முற்றாக எதிர்க்கிறோம்



இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கியுள்ளார் ஜேவிபி உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி.அவரது பேட்டி கீழே...

கேள்வி : ஜேவிபி ஆட்சிக்கு வந்தால் மக்களின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும் என்று சொல்லப்படுகிறதே?

பதில் :எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸதான் இவ்வாறு கூறியுள்ளார்.அவர் பேசுவது அவரது தந்தையின்-ஜே.ஆரின்.டி.எஸ். சேனாநாயக்கவின் காலத்து கதை.

அந்தக் காலத்தில் இடதுசாரி கட்சிகள் அப்படித்தான் கூறின.1979இல் நாம் வெளியிட்ட கொள்கை அது.அந்தக் காலத்துக்கு ஏற்றால்போல் தயாரிக்கப்பட்டது.இப்போது பொருந்தாது.

இருப்பவர்களிடம் இருந்து பறித்து இல்லாதவர்களுக்கு கொடுக்கும் திட்டம் எம்மிடம் இல்லை.

அப்படிச் செய்தால் இருப்பவர்கள் உழைக்கமாட்டார்கள்.
தாம் கஷ்டப்பட்டு உழைத்து மற்றவர்களுக்கு கொடுப்பதா என்று நினைப்பார்கள்.

அதேபோல், இல்லாதவர்களும் உழைக்கமாட்டார்கள்.அரசு தருகிறதுதானே என்று அவர்களும் உழைக்காமல் இருப்பார்கள்.

அப்படி இருந்தால் எப்படி பொருளாதாரம் வளரும்? அதனால் அந்தக் கொள்கையில் நாம் இல்லை.

கேள்வி :13 ஆவது திருச்சட்டத்தை நீங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்கிறீர்களா?

பதில் : இல்லை. ஏற்றுக்கொள்ளவில்லை.

மாகாண சபை அறிமுகப்படுத்தும்போது அரசமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டம் உள்ளது.இப்போது 13உம் நடைமுறையில் இல்லை.மாகாண சபையும் நடைமுறையில் இல்லை. மாகாண சபையும் நடைமுறையில் இல்லை.

தெற்கு மக்கள் ஏற்றுக்கொள்ளாத அரசியல் தீர்வு எங்களுக்கு வேண்டாம் என்று ஆர்.சம்பந்தன் கூறியுள்ளார்.அப்படியென்றால் தெற்கு மக்கள் 13 ஐ ஏற்கவில்லை. எமது நிலைப்பாடும் ஆர். சம்பந்தனின் நிலைப்பாடும் ஒன்றுதான்.

அதுமட்டுமல்ல.தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய-எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எமது அரசால் மாத்திரமே முன்வைக்க முடியும்.

நாம் ஆட்சிக்கு வந்தால் அதைச் செய்வோம்.ரணிலால் ஒருபோதும் தீர்வை முன்வைக்க முடியாது.

A/L பரீட்சைக்காக படிக்கிற மாணவர்களுக்கு ஒரு மணி நேரம் மின்சாரம் வழங்க முடியாத ரணிலால் எப்படி அரசியல் தீர்வை வழங்க முடியும்?

தமிழர்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காக ரணில் நடத்தும் நாடகம் இது.இது தமிழர்களுக்கு தெரியும்.அவர்கள் ஒருபோதும் இதற்கு ஏமாந்து ரணிலுக்கு வாக்களிக்கமாட்டார்கள்.

தெற்கில் ஒரு குழப்பத்தை-இனவாதத்தை ஏற்படுத்துவதற்கு ரணில் முற்பட்டார். அது நடக்கவில்லை.

சிங்கள மக்கள் இனி ஒருபோதும் இந்தமாதிரியான சில்லறை இனவாதத்துக்குள் சிக்கமாட்டார்கள்.

கேள்வி : நீங்கள் வடக்கில் பொய் கூறி இருக்கிறீர்களா 13 தரமாட்டோம் என்று?

பதில் : ஆம்..நாம் அங்கொன்றும் இங்கொன்றும் பேசமாட்டோம்.

தமிழர்களின் உயிர்களின்-உடமைகளை அவர்கள் இழந்துள்ளார்கள்.போர் முடிந்தும் அந்தப் பகுதியில் அபிவிருத்தியும் இல்லை.ஒன்றுமில்லை.

வறுமை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

இதற்கெல்லாம் தீர்வை முன்வைக்காமல் வெறுமனே இனவாதத்தைத் தூண்டுவதற்காகவும் தமிழர்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காகவும் இனவாதத்தைத் தூண்டுகிறார் ரணில்.

அதனால்தான் சொல்கிறோம். ஒருபோதும் ரணிலால் தமிழர்களுக்கு தீர்வை முன்வைக்க முடியாது. நாமேதான் அதை வழங்குவோம். எமது ஆட்சியில்தான் தீர்வு சாத்தியம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைக்கூட நடத்த முடியாத ரணில் எப்படி அரசியல் தீர்வை வழங்குவார்.

அவரது திட்டப்படி 2048யில்தான் நாடு அபிவிருத்தி அடையுமாம். அப்படியென்றால் அதுவரைக்கும் தேர்தல் இல்லை.

இவர்கள் எல்லோரும் திருடர்கள்.இப்போது எங்களை திருடர்களாகக் காட்டுவதற்கு முற்படுகிறார்கள்.ஜேவிபியின் அந்த வேட்பாளர் அப்படிச் செய்தார்.இந்த வேட்பாளர் இப்படிச் செய்தார் என்று கூறி வருகிறார்கள்.எதுவுமே நிரூபிக்கப்பட்ட குற்றங்கள் இல்லை.

நாங்களும் திருடர்கள். நீங்களும் திருடர்கள் என்று கூற முற்படுகிறார்கள்.

இவர்கள் தொடர்ந்து குற்றம் சுமத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.அப்போதுதான் பொய்கள் அதிகம் அதிகமாக மக்களிடம் போய்ச் சேரும். அப்போதுதான் மக்கள் இவர்களை முற்றாக நிராகரிப்பார்கள்.

மக்கள் இன்று முன்னேற்றமடைந்துள்ளார்கள்.பொய் கூறி ஏமாற்ற முடியாது.

திருடர்கள் ஒருபோதும் திருடர்களை தண்டிக்கமாட்டார்கள்.இவர்கள் அதிகாரத்தில் இருக்கும்வரை ஒருபோதும் திருடர்களைத் தண்டிக்கமாட்டார்கள்.

மத்திய வங்கி மோசடியில் ஈடுபட்ட அர்ஜ/ன மகேந்திரன் இன்னும் கைது செய்யப்படவில்லை.

கேள்வி : 2019 தேர்தலில் அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகி இருந்தால்..?

பதில் : அவர் ஜனாதிபதியாகி இருந்தால் ஒருபோதும் இந்த பொருளாதார வீழ்ச்சியை நாடு சந்தித்திருக்காது.ஊழல்,மோசடியை நிறுத்தாமல் ஒருபோதும் நாட்டை-பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

அதைத்தான் நாம் முதலில் செய்திருப்போம்.

இந்த நாடு பொருளாதாரத்து வசதியான நாடு.துறைமுகம் உள்ளது. போக்குவரத்து வசதிகள் உள்ளன.

அப்படி இருந்தும்,ஏன் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வருவதில்லை?

எந்த முதலீடு செய்தாலும் அதிகாரிகளுக்கு-அரசியல்வாதிகளுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டும்.

அதுதான் காரணம்.நாம் ஆட்சிக்கு வந்தால் இந்தத் தடையை நீக்குவோம்.நாம் யாரிடமும் லஞ்சம் வாங்கமாட்டோம்.

ஹில்டன் ஹோட்டலுக்கோ-சங்கிரில்லா ஹோட்டலுக்கோ முதலீட்டாளர்கள் பணப்பெட்டியை எடுத்துக்கொண்டு வரத் தேவையில்லை.

இணையத் தளத்தில் விண்ணப்பித்தால் போதும்.தகுதியான முதலீட்டாளர்கள் என்றால் தெரிவு செய்யப்படுவார்கள்.நேரில் வரத் தேவையில்லை.

ஊழல், மோசடியை ஒழித்தால் மட்டும் போதாது.பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நல்ல திட்டம் தேவை.

1977 - 2017ஆகிய 40 வருடங்களில் 15 ஆயிரம் மில்லியன் டொலர்மட்டுமே வெளிநாட்டு முதலீடாக வந்துள்ளது. வருடம் ஒன்றுக்கு 385 மில்லியன் டொலர் என்ற அடிப்படையில்...

ஆனால், இதைவிட அதிகாமாக அந்நிய செலாவணியை நாட்டுக்கு அனுப்பி வைத்திருப்பவர்கள் வெளிநாடுகளில் பணிபுரிகின்ற இலங்கையர்கள்.

இதை மதிப்பதில்லை.இவர்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதில்லை.இவர்கள் அனுப்புகின்ற நிதியால் நாடு அபிவிருத்தி அடைகிறது என்று அவர்கள் அறிய வேண்டும்.

அடுத்து உற்பத்தித் துறை.இது மக்களின் கைகளில் இருக்க வேண்டும்.ஆனால்,இங்கு இருப்பது ஒரு சிலரின் கைகளில் மாத்திரம். அவர்கள் மாபியாக்கள்.அது மக்களிடம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

நியாயாமான வரித் திட்டம் ஒன்று இருக்க வேண்டும்.உதாரணத்துக்கு பருப்பு இறக்குமதி செய்யப்பட்டால் அது மக்களின் வாய்க்குச் செல்லும்வரை 6 இடங்களில் வரி விதிக்கப்படுகிறது.

அறவிடப்படும் வரி ஒரே இடத்துக்கு அதாவது திறைசேரிக்குச் செல்கிறது.இதற்கு ஏன் பல இடங்களில் வரி அற விடப்பட வேண்டும்.ஒரேயொரு வரி வராவிட்டால் போதும்.

தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளபோதிலும் முறைமை வளர்ச்சியடையவில்லை.ஒரு வேலைக்கு எத்தனை படிவங்கள் நிரப்ப வேண்டியுள்ளது.

இந்த முறைமை இலகுபடுத்தப்பட வேண்டும்.

கேள்வி : சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன? அவர்களின் யோசனையை ஏற்பீர்களா? அல்லது நிராகரிப்பீர்களா?

பதில் : முதலில் நாணய நிதியத்திடம் போகாமல் எங்களது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புகின்ற வேலையையே நாம் முதலில் செய்வோம்.

நாம் சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பு நாடு.நாம் சந்தா செலுத்தி வருகிறோம். நிதியை மாத்திரமன்றி வேறு என்ன உதவியெல்லாம் அவர்களிடம் இருந்து பெற முடியும் என்று யோசிக்க வேண்டும்.

தொழில் நுட்பம்,சேவை போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எங்களது ஆட்சியில் தேவைப்பட்டால் ஐஅக இடம் செல்வோம்.அவர்களின் நிபந்தனையை ஏற்பதா இல்லையா என்று அந்த நேரம் முன்வைக்கப்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே முடிவெடுப்போம்.

கேள்வி : விஜயகுமாரதுங்கவ கொலை செய்தது ஜேவிபி என்று சந்திரிக்கா கூறியுள்ளாரே?

பதில் : இன்று சந்திரிக்கா அப்படி சொல்கிறார்.இதற்கு முன் ஐக்கிய தேசிய கட்சி கொலை செய்தது என்று கூறினார் இன்னொரு நாளைக்கு வேறு யாரையும் அவர் சொல்லலாம்.என்றார்.



## காதலர் தினத்தை கொண்டாடிய எம்பிக்கள்



பெப்ரவரி 14ஆம் திகதி காதலர் தினம் அல்லவா. அந்தத் தினத்தை பல இளம் எம்பிக்கள் அதைக் கொண்டாடி இருக்கின்றார்கள்.

மக்களுக்குத் தெரிந்தால் பிரச்சினையாகிப் போகும் என்பதால் ரகசியமாகவே அதைக் கொண்டாடி இருக்கிறார்கள்.

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்குச் சொந்தமான பல மாடி வீடுகளை அதற்காக புக் செய்து கொண்டாடினர் என்று அறிய முடிகிறது.





## ஜேவிபிக்கு உதவும் அமைச்சர்

அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் ஜேவிபியின் அரசியல் செயற்பாடுகளுக்கு மறைமுகமாக உதவி செய்து வருகிறாராம்.

இதை மோப்பம் பிடித்த ஜனாதிபதியின் விசுவாசிகள் ஜனாதிபதியிடம் அவரைப் போட்டுக் கொடுத்துள்ளனர்.

அவர் விரைவில் ஜனாதிபதியிடம் வாங்கிக் கட்டுவார் என்கிறது ஜனாதிபதி வட்டாரம்.

## அனுர-ரஞ்சித் ப்லான்





தபால் வாக்கெடுப்பை காலவரையறை இன்றி ஒத்திப்போடுவதாக தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்த அன்று பல கட்சிகளின் செயலாளர்கள்–தலைவர்கள் தொலைபேசி மூலம் பேச்சுக்களை நடத்தினர்.அடுத்து என்ன செய்வதென்று கலந்தாலோசித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மதுமபண்டார ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்தார்.

“அரசு தேர்தல ஒத்திப்போடப்போகுது.நம்ம என்ன செய்ற இப்ப..“

“எதிர்க்கட்சி என்ன செய்ய வேண்டுமோ .அதச் செய்வம்...“ என்றார் அனுர.

“அதான் ஒன்று சேர்ந்து பாரிய எதிர்ப வெளிக்காட்டுவோம்.நான் சஜித்ட பேசுறேன்...“ என்றார் மதுமபண்டார.

“நாம வேறவேறயா ஊர்வலம் போய் ஒரு இடத்துல ஒன்று சேர்வம்.தேவண்டா ஒரே மேடைல ஏறுவோம்..“ என்றார் அனுர.

## மெய்சிலிர்க்கச் செய்த அமைச்சர்



அமைச்சர் ரொஷான் ரணசிங்க மக்கள் சேவை நிமிர்த்தம் அவரது சொந்த மாவட்டமான பொலன்னறுவையில் பல பகுதிகளுக்கு அண்மையில் விஜயம் செய்தார்.

அப்போது ஒரு கடையில் வாகனத்தை நிறுத்தி பிஸ்கட் வாங்க முற்பட்டார்.

அந்தக் கடைக்காரரோ பிஸ்கட் இல்லை என்றார்.

“எங்க..அமைச்சர்..சாமான் வாங்கிப் போட கைல காசும் இல்ல. சாமான் வாங்குறதுக்கு மக்கள்ட காசும் இல்ல.பெரிய சிக்கலா போய்கிட்டு வாழ்க்க...“ என்று மனம் நொந்து பேசினார் அந்தக் கடைக்காரர்.

இதைக் கேட்டு மனம் இரங்கிய அமைச்சர் ஒரு வேலை செய்தார்.

உடனே அவரது செக் புத்தகத்தை எடுத்து ஒரு தொகை பணத்தை எழுதிக் கொடுத்தார்.

“இது அரசாங்கத்து காசில்ல.எண்ட சொந்த காசி.இத வச்சு தேவையான சாமான வாங்கிப் போடுங்க..“ என்றார் அமைச்சர்.

பூரித்துப் போனார் அந்தக் கடைக்காரர்.

## பொது வேட்பாளரோ?

ஐக்கிய மக்கள் சக்தியின் புழு பிரிண்ட் என்ற தேர்தல் கொள்கை அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஹோட்டல் ஒன்றில் விருந்துபசாரம் ஒன்று இடம்பெற்றது.அதில் கலந்துகொண்ட ஜேவிபி எம்பி ஒருவர் கூறினார்.பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க அவரது வீடுகள் சிலவற்றை எம்பிக்களுக்கு கொடுத்துள்ளார் என்று.

“அப்படியென்றால் அவர்தான் ஜனாதிபதி வேட்பாளரோ“?

இப்படி அவரிடம் கேட்டார் ஐக்கிய மக்கள் சக்தி எம்பி ஒருத்தர்.




## அமெரிக்க சி.ஐ டி இலங்கையில்?



### பதிலளிக்காது நழுவிய ரணில்

கடந்த வாரம் ஜனாதிபதியை சந்திக்க சென்றனர் அமைச்சர்கள் சிலர் கடந்த வாரம் அமெரிக்க அதிகாரிகள் சிலர் இலங்கைக்கு வந்து போனமை பற்றி ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் அவர்கள் கேட்டனர்.

அமெரிக்க சி.ஐ .டியினர் இலங்கைக்கு வந்தனர் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.அப்படியென்றால் அவர்கள் இலங்கைக்கு வந்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இதன் உண்மைத் தன்மை என்ன? உண்மையில் வந்தது அவர்கள்தானா ?

என்று ஜனாதிபதியிடம் கேட்டார் அமைச்சர் பந்துல குணவர்தன.

ஆனால்,ஜனாதிபதி எந்த பதிலும் வழங்கவில்லை.அவர்கள் சொல்வதைக் கேட்டு சிரித்துக்கொண்டிருந்தார்.

அப்படியே தலைப்பை திசை திரும்பிவிட்டார்.

நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் – அது தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஜனாதிபதி பேசத் தொடங்கினார்.





## வேண்டாம்... வேண்டும்..

ரொம்ப நாளாக அடிபடுகின்ற கதைதான் ராஜித சேனாரத்ன அரசுடன் இணையப்போகிறார் என்பது.

அவரிடம் அதைப்பற்றிக் கேட்டால் உரிய பதில் இல்லை.

ஆம் என்றும் இல்லை...இல்லை என்றும் இல்லை.

இருந்தும்,அவர் அரசுக்கு ஆதரவாகவே பேசுகிறார்.

அவர் ஏன் செல்லவில்லை என்று விசாரித்தால் அதற்கு கூடும்ப பிணைப்புதான் காரணமாம்.

ராஜிதவின் மூத்த மகன் போவோம் என்கிறாராம்..இளைய மகன் வேண்டாம் என்கிறாராம்.

## அது சஜித்தின் பண்பு



ராஜபக்ஸ-ரணில் ஆகியோரின் பெயர் சொல்லி சஜித் பிரேமதாசா விமர்சிப்பதில்லை. அவருக்கு அவர்கள்மீது பயம்.அல்லது அவர்களுக்கு ஆதரவாக செயற்படுகிறார் என்ற ஒரு குற்றச்சாட்டை ஜேவிபியினர் முன்வைத்து வருகிறார்கள்.

சஜித்தை சந்தித்த ஹிருணிகா இதை சஜித்திடமே கேட்டார்.

அதற்கு சஜித்..““இது எனது பண்பு. ராஜபக்ஸ குடும்பத்தின் பெயர்களை மாத்திரமல்ல. யாரையும் பெயர் குறிப்பிட்டு நான் விமர்சிப்பதில்லை. எனது அணைத்து நாடாளுமன்ற உரைகளையும் எடுத்துப் பாருங்கள் என்று கூறினார்.



## 2020 நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்து அரசியலில் இருந்து ஒதுங்கிய நீங்கள் ஏன் மீண்டும் அரசியலுக்கு வந்தீர்கள்?

## ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பல முக்கியஸ்தர்கள் அரசு பக்கம் போய் விட்டார்கள். இந்த இடைவெளியை நிரப்புவதற்காகவா உங்களை அழைத்து வந்திருக்கிறார்கள்?

## நீங்கள் ஏன் ஜேவிபிக்கு அஞ்சுகிறீர்கள்?

## ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார கொள்கைக்கும் ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதார கொள்கைக்குமிடையிலான வித்தியாசம் என்ன?

## ஆட்சியை பாரம் தந்தால் உங்களால் செய்ய முடியுமா?

**13 ஆம் திருத்தச் சட்டம் இப்போது இருக்கின்ற அதேநிலையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.பொலிஸ்-காணி அதிகாரம் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.தனிநபரின் கைகளில் அல்ல. முதலமைச்சரின் கைகளில் அல்ல. அந்த அதிகாரத்தை முதலமைச்சரிடம் ஒப்படைக்கும்போதுதான் பிரச்சினை**

**ஆணைக்குழுவிடம் ஒப்படைத்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை. பிரதி பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் இப்போது முதலமைச்சருக்கே உண்டு. அந்த அதிகாரமும் ஆணைக்குழுவுக்கு ஒப்படைத்தால் நல்லது.**

**தனி நபரிடம் அதிகாரம் செல்லும்போது ஊழல்,மோசடிகள் இடம்பெறுவது அதிகம். அதைத் தடுப்பதற்கு ஒரே வழி ஆணைக்குழுதான்.**

# தேர்தலை நடத்தாவிட்டால் சிறைக்கு அனுப்புவோம்

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கியுள்ளார் முன்னாள் பிரதி அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உப தவிசாளருமான சுஜீவ சேனசிங்க.அவரின் பேட்டியின் முழு விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : 2020 நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்து அரசியலில் இருந்து ஒதுங்கிய நீங்கள் ஏன் மீண்டும் அரசியலுக்கு வந்தீர்கள்?**

பதில் : நாடு பொருளாதாரரீதியில் பள்ளத்தில் வீழ்ந்துவிட்டது.இனியும் வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்க முடியாது.

சஜித் பிரேமதாச,ஏனைய எம்பிக்கள் என்னை மீண்டும் அரசியலுக்கு அழைத்தார்கள். நாம் வாய் மூடி இருந்தால் எமது எதிர்கால சந்ததிக்கு வாழ்வதற்கு நாடு என்ற ஒன்று இருக்காது.இப்போதே அதிகமானவர்கள் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டு இருக்கிறார்கள்.

எமது எதிர்கால சந்ததிக்காகவே நான் மீண்டும் அரசியலுக்குத் திரும்பினேன்.இந்த பொருளாதார பிரச்சினையால் நானும்தான் பாதிக்கப்பட்டுள்ளேன்.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பல முக்கியஸ்தர்கள் அரசு பக்கம் போய் விட்டார்கள்.இந்த இடைவெளியை நிரப்புவதற்காகவா உங்களை அழைத்து வந்திருக்கிறார்கள்?**

பதில் : அது எனக்குத் தெரியாது.அவர்கள் தொடர்ச்சியாக என்னை அழைத்தார்கள். தற்போதைய நாட்டு நிலைமையை பார்க்கும்போது நாட்டில் இருக்க முடியாத நிலை ஏற்படும்.அதனால்தான் வந்தேன்.

**கேள்வி : நீங்கள் ஏன் ஜேவிபிக்கு அஞ்சுகிறீர்கள்?**

பதில் : நாங்கள் அஞ்சவில்லை.அவர்கள் எங்களுக்கு சவால் இல்லை.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார கொள்கைக்கும் ரணில் விக்ரமசிங்கவின் பொருளாதார கொள்கைக்குமிடையிலான வித்தியாசம் என்ன?**

பதில் : பெரிய வித்தியாசம் இல்லை. ஆனால்,சர்வதேசம் ரணிலை நம்பாது. காரணம்.இவர் ராஜபக்ச குடும்பத்தைப் பாதுகாப்பதற்காகவே ஜனாதிபதி பதவியை ஏற்று இருக்கிறார்.நாட்டுக்காக அல்ல.

இது சர்வதேசத்துக்கு தெரியும்.இதனால் சர்வதேசத்துக்கு நம்பிக்கை இல்லை.

இப்போது ரணில் வரத்து பொருளாதாரக் கொள்கையை மாற்றிவிட்டார்.மொட்டு கட்சியின் பொருளாதாரக் கொள்கையையே நடைமுறைப்படுத்துகிறார்.

அவரது ஒருசில கொள்கையை மட்டும் அதில் புகுத்துகிறார்.

**கேள்வி : சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறுவது தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி தேவை என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.ஆனால்,அவர்கள் விதிக்கும் எல்லா நிபந்தனைகளுக்கும் உடன்பட முடியாது.

குறிப்பாக ஒரு லட்சம் ரூபா சம்பளம் வாங்குகிறவர்கள் வரி செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்க முடியாது.2.5 லட்சம் ரூபாவுக்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்களே வரி செலுத்த வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு.

சஜித் பிரேமதாசாவின் கொள்கையை சர்வதேசம் ஏற்றுள்ளது.அவர் யாருடனும் டீல் வைத்திருக்கவில்லை.இது சர்வதேசத்துக்குத் தெரியும்.

**கேள்வி :திருடர்களுக்கு தண்டனை கொடுப்பதுபற்றி பேசுகிறீர்கள்.ஜேவிபி சொல்கிறது உங்களது மேடையில்தான் திருடர்கள் உள்ளார்கள் என்று.?**

பதில் : எங்களது கட்சி உறுப்பினர்கள் யாருக்குமே ஊழல்,மோசடி குற்றச்சாட்டு கிடையாது.கட்சியில் அதிகமானவர்கள் வர்த்தகர்கள்.அவர்கள் எம்பி பதவிக்கு வந்து திருட வேண்டிய தேவை இல்லை.

எமது தலைவரைப் பாருங்கள்.அவர் திருடர் இல்லை.வியாபாரிகளிடம் இருந்து பணம் சேகரித்து பஸ்கள் வாங்கி பாடசாலைகளுக்கு வழங்கி வருகிறார்.அதுபோல்,மேலும் பல சேவைகளை வழங்கி வருகிறார்.

அவர் நேர்மையானவர்.தூய்மையானவர்.

**கேள்வி : ஆட்சியை பாரம் தந்தால் உங்களால் செய்ய முடியுமா?**

பதில் : கோத்தா ஜனாதிபதியாக இருந்தபோது பிரதமர் பதவியை பாரமேற்குமாறு அவர் சஜித் பிரேமதாஸாவுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அது பதவியை ஏற்கும் சூழல் இல்லை.

அவர் பாரமேற்றிருந்தால் இந்த அமைச்சர்களுடன் வேலை செய்ய முடியுமா? இல்லை.அவர்களை பாதுகாக்கும் வேலையை சஜித் செய்யமாட்டார்.அப்படி இருக்கும்போது அவர்கள் சஜித்துக்கு எதிராக செயற்பட்டிருப்பார்கள்.அப்படி ஒருபோதும் ஆட்சி செய்ய முடியாது.

அந்த அரசை கட்டியெழுப்பினால் அவரை கீழால் வெட்டிவிட்டு அமைச்சர்கள் ஆட்சியைக் கொண்டு போயிருப்பார்கள்.

நல்லாட்சியில்கூட ரணிலை வெட்டிவிட்டு பிரதமர் பதவியை சஜித்துக்கு கொடுப்பதற்கு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சி எடுத்தார்.

சஜித் அதை ஏற்கவில்லை.பின்கதவால் சென்று ரணிலின் காலை வாரிவிட்டு பிரதமர் பதவியை ஏற்பதற்குத் தயாராக இருக்கவில்லை.

அவரிடம் இருப்பது மஹாத்மாகாந்தியின் தன்மை.

அப்போது பிரதமர் பதவியை ஏற்குமாரே நான் கூறினேன்.அவர் அதற்கான காரணங்களைக் கூறி மறுத்துவிட்டார்.

இப்போது ஆட்சியைப் பாரமேற்றால் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சரியான பொருளாதாரத் திட்டம் எம்மிடம் உண்டு.

ஹர்ச டி சில்வா,கபீர் ஹாசீம்,எரான் விக்ரமரத்ன ஆகிய பொருளாதார நிபுணர்கள் எம்மிடம் இருக்கிறார்கள்.

இலங்கை சிறிய நாடு.அழகாக அபிவிருத்தி செய்ய முடியும்

**கேள்வி : நட்டமடையும் அரச நிறுவனங்களை மீள் புனரமைப்புச் செய்வது தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : கட்டாயம் மீள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.பாடசாலைகள்–வைத்தியசாலைகள் தவிர அணைத்து நிறுவனங்களும் மீள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

அரச நிறுவனங்களில் அதிகமான ஊழியர்கள் நியமிக்கப்பட்டு இருப்பதால்தான் நாட்டுக்கு இந்த நிலைமை.அரசியல்வாதிகள் அவர்களின் அரசியல் தேவைகளுக்காக இப்படி நிரப்பி வைத்திருக்கிறார்கள்.

semi- government அடிப்படையில் செல்ல வேண்டும்.இல்லாவிட்டால் மக்கள்தான் அந்த செலவை மேலும் சுமக்க வேண்டி வரும். இப்போதுதான் அப்படித்தான் மக்கள் சுமந்துகொண்டிருக்கிறார்கள்.

நிறுவனங்களை இப்படிக் கொண்டு செல்வதன்மூலம் நாட்டை ஒருபோதும் அபிவிருத்தி செய்ய முடியாது.

**கேள்வி : 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் உங்களது உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்ன?**

பதில் : 13 இப்போது இருக்கின்ற அதேநிலையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.பொலிஸ்–காணி அதிகாரம் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். தனிநபரின் கைகளில் அல்ல.முதலமைச்சரின் கைகளில் அல்ல.

அந்த அதிகாரத்தை முதலமைச்சரிடம் ஒப்படைக்கும்போதுதான் பிரச்சினை. ஆணைக்குழுவிடம் ஒப்படைத்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

பிரதி பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் இப்போது முதலமைச்சருக்கே உண்டு.அந்த அதிகாரமும் ஆணைக்குழுவுக்கு ஒப்படைத்தால் நல்லது.



# நெஸ்லே குருநாகல் தொழிற்சாலையில் முதலீடு

நெஸ்லே லங்கா "நல்லுணவு, நல்வாழ்வு" என்ற திட்டத்தின்கீழ் நிறுவனம், குருநாகலில் உள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில் ஒரு உயிர்த்திணிவு தொழில்நுட்ப கொதிகலன் திட்டத்தில் ரூபா 1 பில்லியன் இற்கும் மேலான தொகையை முதலீடு செய்யவுள்ளது.

இது, 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், Thermax Energy & Environment Lanka (Private) Limited நிறுவனத்துடனான Build-Own-Operate-Transfer (BOOT) (நிர்மாணிப்பு-உரிமையாண்மை-செயல்பாடு-கைமாற்றம்) அடிப்படை உடன்படிக்கையின் கீழ் இது முன்னெடுக்கப்படும்.

மக்களுக்கு மட்டுமின்றி, பூமிக்கும் சாதகமான விளைவை ஏற்படுத்தும் விதத்தில் தனது செயல்பாடுகளை நிலைபெறச் செய்வதில் நெஸ்லே உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, நிறுவனம் 2025 ஆம் ஆண்டில் 20மூ மற்றும் 2030 ஆம் ஆண்டில் 50மூ பச்சைவீட்டு வாயு உமிழ்வைக் குறைப்பதுடன், ஈற்றிலே 2050 ஆம் ஆண்டளவில் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடையும் நோக்கில், பண்ணையில் இருந்து ஆரம்பித்து தயாரிப்பின் பாவனை முற்றுப்பெறும் வரை ஒட்டுமொத்த மதிப்புச் சங்கிலி முழுவதும் வியாபித்துள்ள ஒரு விரிவான வேலைத்திட்டத்தை உருவாக்கியுள்ளது.

# Pay & Go உடன் கைகோர்க்கும் HNB



HNB PLC, MegaPay (Pvt) Ltd சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SMEs) அணுகக்கூடிய மற்றும் மலிவு அட்டை கொடுப்பனவு ஏற்புத் தீர்வை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கையில் முன்னணி டிஜிட்டல் கொடுப்பனவு தீர்வு வழங்குனரான Pay & Go உடன் இணைந்துள்ளது.

இந்த கூட்டாண்மை மூலம், ளுஆநு தொழில்முனைவோர், Pay & Go Android POS Terminals மூலம் நேரடியான, கொடுப்பனவு இயந்திரங்கள் மற்றும் ஞசு பரிவர்த்தனைகள் ஆகிய இரண்டையும் பயன்படுத்தி விரிவுபடுத்துவதற்கு முன்கூட்டியே POS அமைப்புடன் வசதியளிக்கப்படும்.

"SMEக்கள் இலங்கைப் பொருளாதாரத்தின் முக்கிய உந்துசக்தியாக இருக்கின்றன, மொத்த வேலைவாய்ப்பில் 45% மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரைவாசிக்கும் அதிகமாகும். முன்னோடியில்லாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதில், தற்போதைய டிஜிட்டல் உலகில் போட்டிடுவதற்கு தங்களை மாற்றிக் கொள்வதற்காக விலைமதிப்பற்ற நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம், கருவிகள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றை வழங்குவது உறுதியான காரணிகளில் ஒன்றாக உள்ளது.




# அல்ஸைமர் பவுண்டேசனுடன் இணையும் AIA சிறீலங்கா



AIA ஸ்ரீலங்கா அல்சைமர் மற்றும் வேறு வகையான ஞாபக மறதி நோய்களுக்கான விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில் லங்கா அல்சைமர் பவுண்டேசன் நிறுவனத்துடன் இணைகிறது.

2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் சனத்தொகையில் கிட்டத்தட்ட அரை மில்லியன் மக்கள் ஞாபக மறதியுடன் தொடர்புடைய நோய்களினால் பாதிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமிருப்பதாக ஆய்வொன்றில் மதிப்பிடப்பட்டுள்ளது.

AIA இன்சூரன்ஸ் அந்த நோயின் அபாயத் தன்மையினை அறிந்து கொண்டுள்ளமையினால் இலங்கை மக்கள் அனைவரும் நீண்ட ஆயுளுடன், ஆரோக்கியமாக, சிறந்த வாழ்க்கையினை வாழ்வதற்கு உதவுவதை நோக்காகக் கொண்டு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

இந்த நோக்கத்திற்காக யுஐய இன்/ரன்ஸ் டுயுகு நிறுவனத்திற்கு தனது நன்கொடையினை வழங்கியுள்ளதுடன், அல்சைமர் நோயினை ஆரம்பத்தில் கண்டறிதல் மற்றும் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் மற்றும் விழிப்புணர்வையும் அதிகரிக்கும் நோக்கில் தனது முழுமையான ஆதரவினையும் டுயுகு இற்கு வழங்கியிருக்கின்றது.

# Dialog வழங்கும் டேட்டா பிளான்கள்




பொழுதுபோக்கு என்பது தற்போது முற்றிலும் வளர்ச்சி கண்டுள்ளது. Netflix, Amazon Prime மற்றும் Apple TV போன்ற பல ஒன்லைன் தளங்கள் உள்ளன. ஆனால் இதற்கு அதிக அளவில் டேட்டா தேவைப்படுகிறது. அதற்காக அதிக பணச்செலவை ஏற்படுத்தலாம்.

இதனாலேயே Dialog Home Broadband தற்போது முழுக் குடும்பத்திற்கும் பிரத்தியேகமான, கட்டுபடியான டேட்டா திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

வெறும் ரூபா 1,562 + வரிகளுடன், 30 நாட்களுக்கு, Netflix க்கான வரையறையற்ற டேட்டா, Apple TV, Amazon Prime மற்றும் Spotify க்கான 100GB சலுகையை அனுபவிக்க முடியும். இன்னும் கட்டுபடியான கட்டணத்தில் பாவிக்க விரும்பினால், 7 நாள் திட்டத்தை நீங்கள் ரூபா 599 + வரிகளை மட்டுமே செலுத்தி, பெற்றுக்கொள்ள முடியும்.

இதன் மூலம் நீங்கள் Netflix க்கான வரையறையற்ற டேட்டாவுடன், Apple TV, Amazon Prime மற்றும் Spotify ஆகியவற்றுக்கான 20GB டேட்டாவை பெற்றுக்கொள்ள முடியும். நீங்கள் இசைப்பிரியராக இருந்தால், 30 நாட்களுக்கு Spotify க்கான 10GB டேட்டாவை ரூபா 214 + வரிகளுக்கு பெற்றுக்கொள்ள முடியும்.

# 23 பில்லியனை அடையும் Softloic Life





சவால்கள் நிறைந்த பொருளாதார பின்னணியில் சிறந்த வருடாந்தர நிதி முடிவுகளை வெளியிட்டு, Softlogic Life ஆனது 31 டிசம்பர் 2022 இல் முடிவடைந்த ஆண்டில் 23,083 மில்லியன் எழுதப்பட்ட மொத்த கட்டுப்பண வருமானத்தை (GWP) பதிவு செய்ய முடிந்தது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 15% வளர்ச்சியாகும். கடுமையான பொருளாதார நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் போதும், Softlogic Life நிறுவனம் தனது ஆயுள் காப்புறுதி பத்திரதாரர்களுக்கு 8,264 மில்லியன் ரூபாய் உரிமைகோரலைத் தீர்ப்பதன் மூலம் துறையில் வலுவாக உள்ளது.

டிசம்பர் 31, 2021 இல் இருந்த 16.08மூ உடன் ஒப்பிடும்போது Softlogic Life இன் சந்தைப் பங்கு (Market Share) 16.87% ஆக அதிகரித்துள்ளது.

சந்தைப் பங்கின் தொடர்ச்சியான வளர்ச்சியுடன், Softlogic Life இப்போது ஆயுள் காப்புறுதி சந்தையில் இரண்டாவது பாரிய நிறுவனமாகத் தரப்படுத்தப்பட்டுள்ளது.

Softlogic Life ஆனது 2022 இல் 15% GWP வளர்ச்சியைப் பதிவு செய்ய முடிந்துள்ளது, இது காப்புறுதித் துறையின் மதிப்பிடப்பட்ட வருடாந்திர வளர்ச்சியான 9.6% ஆகும்.

# SOS சிறுவர் கிராமங்கள் உதவி



சிறுவர்களின் உரிமைகளுக்காக இயங்கும் சிறுவர் நலன்புரி நிறுவனமாகத் திகழும் இலங்கை SOS சிறுவர் கிராமங்கள் (SOSCV SLதனித்தனி சிறுவர் – உணவு, கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் மனித நேய உதவித் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

மனிதநேய உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் அங்கமாக, SOSCV SL காணப்படும் ஒன்பது மாவட்டங்களின் பிரதேச செயலகங்களுடன் SOSCV SL இயங்கி, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பங்காளர் நிறுவனங்களின் ஆதரவுடன், குறைந்த வருமானமீட்டும் குடும்பங்களின் தேவைகளைக் கொண்ட சிறுவர்களை இனங்கண்டு, அவசியமான உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.